ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2213/36 - 2021 පෙබරවාරි මස 03 වැනි බදාදා - 2021.02.03

*2213/36 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 10/2017* (III)

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின்கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

கொழும்பு,
*2021*, பெப்புருவரி *03.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் *2021* ஆம் ஆண்டின் *3* ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் *2021*, மாச்சு *22* இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

*2.* இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகக் குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகையானது, இவ்வொழுங்குவிதிகளிலும் இதற்கான அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய, சட்டத்தின் *4* ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகளாதல் வேண்டும்.

1A - PG 5300 — 450 (2021/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கெனவழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன்மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

(அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்
(ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்கு விதிகளுக்கிணங்கியொழுகவுள்ளதென்று.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1) ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவணமுறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

5. மத்திய வங்கியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாகவிராத வேறெவரேனுமாள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

6. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் 'பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்' என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ);
(ஆ) யூரோ;
(இ) ஸ்டேர்லிங் பவுண்;
(ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
(உ) சிங்கப்பூர் டொலர்;
(ஊ) சுவீடன் குரோனர்;
(எ) சுவிஸ் பிரான்க்;
(ஏ) கனேடிய டொலர்;
(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்து டொலர்.

(2) மத்தியவங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

7. 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் தேதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையுமான 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டுநடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அதன் செல்லுபடிக்காலப்பகுதி 2020, திசெம்பர் 18 ஆந் தேதிய 2206/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நீடிக்கப்பட்டதும், மற்றும் 2020, யூலை 2 ஆந் தேதிய 2182/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையானது, அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது பயனுறுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மூலதனக் கொடுக்கல் வாங்கல்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"குடியகல்பவர்" என்பது,-

(அ) வேறொரு நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்த்தை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ள இலங்கையரொருவர்;

(ஆ) அவரது தாய் அல்லது தகப்பன் இலங்கையில் பிறந்துள்ள, இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டிருக்கின்ற இலங்கைப் பிரசையொருவர்; அல்லது

(இ) (i) அவரது தாய் அல்லது தகப்பன் இலங்கையில் பிறந்துள்ள; அத்துடன்

(ii) அவரது பிறப்பு இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள,

இலங்கைப் பிரசையல்லாத ஒருவர் என்று பொருளாகுமென்பதுடன் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களின் பராயமடையாதோரையும் உள்ளடக்கும்;

"ஊழியர் சகாய நிதியம்" என்பது, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் என்று பொருளாகும்;

"ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என்று பொருளாகும்;

"கிட்டிய குடும்பவுறுப்பினர்கள்" என்பது, இயைபான ஆளின் பெற்றோர், பாட்டன்மார் பாட்டிமார், உடன்பிறந்தோர் மற்றும் வாழ்க்கைத்துணை என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"அமைச்சர்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளையுடையதாதல் வேண்டும்;

"பணச்சபை" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பெற்றோர் புலம்பெயர் செய்திட்டம்" என்பது, ஒரு வெளிநாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ள ஆளொருவரின் பெற்றோர் அத்தகைய வெளிநாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தைப் பெறுவதற்கு அத்தகைய நாட்டினால் தொழிற்படுத்தப்பட்டவொரு செய்திட்டம் என்று பொருளாகும்;

"நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது, (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

*"தற்காலிக வதிவு விசா" என்பது, குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கமைய, எதிர்காலத் தேதியொன்றில் அந்நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தை அல்லது பிரசாவுரிமையைப் பெறுவதற்குத் தனியாளை உரித்துள்ளவராக்குகின்ற விசா வகுதியினுள் அடங்குகின்றதும் இலங்கைப் பிரசையொருவரினால் பெறப்பட்டதுமானவொரு விசா என்று பொருளாகும்.*

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

பாகம் I

**குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை**

1. இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள வரையறைகளுக்கும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, 18 வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவராக உள்ள குடியகல்பவர் ஒருவர், இலங்கை ரூபாக்களை வெளிநாட்டு நாணயமாக மாற்றுவதனை உட்படுத்துகின்ற புலம்பெயர் படியை உரிமைகோருவதற்குத் தகவுடையவராகவுள்ளார்.

2. புலம்பெயர்படியானது பின்வருவனவற்றிலிருந்து உரிமைகோரப்படுதல் வேண்டும்:-

(1) இலங்கையில் வதிபவராகவிருக்கையில் குடியகல்பவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகள் பயனுக்கு வருவதற்குமுன்னர் அத்தகைய ஆளின் இலங்கை ரூபாக் கணக்குகளினூடாக நிதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் கொள்ளப்பட்ட அல்லது இவ்வட்டவணையின் இப்பாகத்தின் 8 ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு கொள்ளப்பட்ட (அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்;

(2) இலங்கையில் வதிபவராகவுள்ள ஆளொருவரிடமிருந்து ஒரு குடியகல்பவரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட (தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் நீங்கலாக, அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்;

(3) இலங்கையில் வதிகின்ற ஆளொருவராகவுள்ள கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து ஒரு குடியகல்பவரினால் கொடையாகப் பெறப்பட்ட (தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் நீங்கலாக, அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்;

(4) இலங்கையில் வதிபவராகவிருக்கையில் செய்யப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகள் பயனுக்கு வருமுன்னர் அவரது அல்லது அவளது இலங்கை ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து குடியகல்பவருக்குக் கிட்டிய குடும்பவுறுப்பினர் ஒருவராகவுள்ள வேறொரு குடியகல்பவரிடமிருந்து (அதாவது கைமாற்றுநரிடமிருந்து) மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது கொடை என்றவகையாகப் பெறப்பட்ட அல்லது கைமாற்றுநரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது கைமாற்றுநரினால் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட அல்லது அட்டவணையின் இப்பாகத்தின் 8 ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாகச் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து (தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் நீங்கலாக, அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்; அல்லது

(5) (அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட நிதிகளாகவுள்ளவையும், கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து குடியகல்பவரினால் பெறப்பட்டவையுமான பணவகையான கொடைகள்.

3. இவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட புலம்பெயர் படிக்குப் பின்வரும் வரையறைகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(1) குடியகல்பவர் ஒருவருக்கு ஐஅடொலர் 200,000 கொண்ட ஆரம்பப் புலம்பெயர் படியொன்று.

(2) ஐஅ டொலர் 30,000 கொண்ட வருடாந்தப் புலம்பெயர்படி; ஆரம்பப் புலம்பெயர்படி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டபின்னர் குறைந்தபட்சம் 12 மாதங்கள் கழிந்தபின்னர், அத்தகைய முதலாவது வருடாந்தப் படி கைமாற்றத்தக்கதாகும். முதலாவது வருடாந்தப்படி தவிர, அடுத்துப்பின்னரான படிகள் பஞ்சாங்க

ஆண்டொன்றுக்குக் கைமாற்றத்தக்கனவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், (அந்நிதிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய ஒரு வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பேணப்பட்டிருப்பின் அத்தகைய காலப்பகுதிக்காக), ஒன்றுதிரளுகையில் கைமாற்றப்பட முடியுமாக இருத்தலும் வேண்டும்;

(3) 2017, நவெம்பர் 20 ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பப் புலம்பெயர் படியின் பாகத்தை உரிமை கோரியுள்ளவொரு குடியகல்பவருக்காக, 150,000 ஐஅ டொலரிலிருந்தான மீதி மற்றும் அட்டவணையின் இப்பாகத்தின் 3 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக 30,000 ஐஅ டொலரைக் கொண்ட அடுத்துப் பின்னரான வருடாந்தப் படி;

(4) 2017, நவெம்பர் 20 ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பப் புலம்பெயர் படியை முழுமையாகப் பயன்படுத்தியுள்ள குடியகல்பவருக்காக 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்காகப் பஞ்சாங்க ஆண்டொன்றிற்கு 20,000 ஐஅ டொலரைக் கொண்ட ஏதேனும் ஒன்றுதிரண்ட வருடாந்தப் படி மற்றும் அட்டவணையின் இப்பாகத்தின் 3 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக 30,000 ஐஅ டொலரைக் கொண்ட அடுத்துப்பின்னரான வருடாந்தப் படி.

4. குடியகல்பவரொருவர் எந்நாட்டில் நிரந்தர வதிவுரிமையை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ளாரோ அந்நாட்டில், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக இலங்கையில் வதிபவராகவிருக்கையில் சொல்லப்பட்ட தனியாளினால் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதியானது, தகவுடைய புலம்பெயர் படியை உரிமை கோருகின்ற நேரத்தில், தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

5. வெளிநாடுகளினால் தொழிற்படுத்தப்படுகின்ற “பெற்றோர் புலம்பெயர் செய்திட்டங்கள்” என்ற விடயத்தில், விசா பெறுவதற்காக அத்தகைய தனியாட்களினால் கடல்கடந்த அதிகாரிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளுக்கான நிதிகள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, அத்தகைய தனியாட்களினால் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அனுப்பப்படுதல் வேண்டும். கொடுப்பனவு எந்நாட்டுக்குச் செலுத்தப்பட்டதோ அந்நாட்டில் நிரந்தர வதிவுரிமையைப் பெற்றதன்மேல், அத்தகைய கொடுப்பனவுகளின் மொத்தத்தொகை, தகவுடைய புலம்பெயர் படியை உரிமைகோருகின்ற நேரத்தில் அத்தகைய தனியாட்களின் தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

6. பதினெட்டு வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவராகவுள்ள இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் வேறொரு நாட்டில் தற்காலிக வதிவு விசாவைப் பெற்றுள்ளவருமான இலங்கையரான தனியாளொருவர் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, அதிகபட்சம் 30,000 ஐஅடொலர்களை உரிமைகோரலாம். அத்தகைய ஆட்களினால் திறக்கப்பட்டவொரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அத்தகைய ஆட்கள் சொல்லப்பட்ட படியை உரிமைகோரலாம். அவ்வாறு உரிமைகோரப்பட்ட தொகைகள், புலம்பெயர் படியை உரிமைகோருகின்ற நேரத்தில் தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

7. திருப்பியனுப்பும் முறை

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 5 ஆம், 6 ஆம் பந்திகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட குடியகல்வோர் அல்லது ஆட்கள், தகவுடைய படிகளைத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காக, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புக்கமைய, வங்கித்தொழில் முறைமையில் ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கை மட்டுமே திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) குடியகல்பவரொருவர், அட்டவணையின் இப்பாகத்தின் 7(4) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அவரது அல்லது அவளது வருமானத்தைத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காகத் தனிவேறான கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தேவைப்படுத்தப்படின், அத்தகைய ஆள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, அதே நோக்கத்துக்காக, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் ஒரு குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கை மட்டுமே திறந்து பேணலாம். எவ்வாறாயினும், மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்கு மற்றும் குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கு ஆகிய இரண்டும் அதே அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

(3) புலம்பெயர் படியானது, விண்ணப்பகாரரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு அல்லது குடியகல்பவரின் இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் கரைகடந்த வங்கித்தொழிற் கூறொன்றிலுள்ள கணக்கொன்றுக்கு அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள கணக்கொன்றுக்கு மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்கிலிருந்து கைமாற்றப்படலாம்.

(4) அட்டவணையின் இப்பாகத்தின் 2 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் மற்றும் மூப்போய்வூதிய நன்மைகள் (ஊழியர் சகாய நிதியம் (ஊசநி), ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (ஊநநி), பணிக்கொடை அத்துடன் ஓய்வூதியங்கள் அல்லது வேறெவையேனும் இளைப்பாற்று நன்மைகள் உட்பட) விடயத்துக்கேற்ப, முறையான மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குக்கு அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குக்கு அல்லது வதிவற்ற ரூபாக் கணக்குக்கு வரவுவைக்கப்படலாமென்பதுடன் தகவுடைய புலம்பெயர் படிக்கு அமைந்ததாகவிராமல், குடியகல்பவரின் மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படுதலும் வேண்டும். அத்தகைய நிதிகள் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிலிருந்து அல்லது குடியகல்பவரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கிலிருந்து குடியகல்வோரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றுக்கு அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றுக்கு அல்லது இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கியில் கரைகடந்த வங்கித்தொழிற் கூறிலுள்ள கணக்கொன்றுக்கு அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள கணக்கொன்றுக்குக் கைமாற்றப்படலாம்.

8. இலங்கையில் வைத்திருக்கப்பட்ட நிதிகளிலிருந்து குடியகல்வோரினாலான முதலீடுகள்

(1) குடியகல்பவரொருவர், அத்தகைய குடியகல்பவரின் வதிவற்ற ரூபாக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகளிலிருந்து 2021, பெப்புருவரி 3 ஆந் திகதிய 2213/ 35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

(2) அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் மூலதன வரும்படிகளும், அம்முதலீடானது முறையான எந்த வதிவற்ற ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்டதோ முறையான அந்த வதிவற்ற ரூபாக் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, தகவுடைய புலம்பெயர் படிக்கமையவிராது, விடயத்துக்கேற்ப, குடியகல்பவரின் முறையான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கினூடாக அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய முதலீடுகளின் எவையேனும் மூலதன வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான தகவுடைய புலம்பெயர் படிக்கமைய, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படலாம்.

9. குடியகல்பவரொருவரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது அத்தகைய குடியகல்பவரினால் இலங்கையில் வைத்திருக்கப்பட்ட இலங்கை ரூபாக்களைப் பயன்படுத்துவதன்மூலம் கொள்வனவுசெய்யப்பட்ட அசைவற்ற ஆதனமொன்றைக் குடியகல்பவர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனுமாளுக்கு விற்பனை செய்யும் பட்சத்தில், அத்தகைய ஆதனத்தின் விற்பனை தொடர்பிலான பிரதிபயனின் கொடுப்பனவு இலங்கை ரூபாக்களில் செலுத்தப்பட்டு அக்குடியகல்பவரின் ஒரு வதிவற்ற ரூபாக் கணக்குக்கு அல்லது மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் ரூபாக் கணக்குக்கு மட்டுமே வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

10. ஏனைய நியதி நிபந்தனைகள்

(1) குடியகல்பவரொருவர் எந்த நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்த்தைப் பெற்றுள்ளாரோ அந்த நாட்டில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துக்காக இலங்கையை விட்டுச்செல்வதற்கு அவர் அல்லது அவள் எதிர்பார்க்குமிடத்து, அவர் அல்லது அவள் எந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுடன் இலங்கை ரூபாக் கணக்குகளைப் பேணுகின்றாரோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு, அத்தகைய தனியாளின் அத்தகைய ரூபாக் கணக்குகளை வதிவற்ற ரூபாக் கணக்குகளாக மீளப்பெயர்குறிப்பதற்கென, அவரின் அல்லது அவளின் புலம்பெயர்வு தொடர்பாக அறிவித்தல் வேண்டும். ஏலவே ஒரு குடியகல்பவராகவுள்ள தனியாளொருவர், இவ்வொழுங்குவிதிகள் பயனுள்ளனவாக வருகின்றதிலிருந்து 6 மாதங்களுள் அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*(2)* புலம்பெயர் படியானது இலங்கையை விட்டுச்செல்லும் நேரத்தில் (ஆரம்பத்தில் அல்லது அடுத்துப்பின்னர்) அல்லது குடியகல்பவர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற காலத்தின்போது மட்டுமே உரிமைகோரப்படுதல் வேண்டும்.

பாகம் II

சட்டம் நடைமுறைக்கு வருவதற்குமுன்னர் வழங்கப்பட்டிருந்தவையும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்களைக் கணிசமானளவில் ஒத்திருக்கின்றவையுமான ஏதேனும் (பொதுவான அல்லது விசேடமான) அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்ட ஏலவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல் வாங்கல்களும், இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது எவையேனும் அடுத்துப் பின்னரான ஒழுங்குவிதிகளினால் குறிப்பாக வேறுபடுத்தப்பட்டாலொழிய, அத்தகைய அங்கீகாரத்தின்கீழ் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கமைய, தொடர்ந்து நடாத்தப்படலாம்.

பாகம் III

**கணக்குகளுக்கு மீளப்பெயர் குறித்தல் முதலியன**

1. எல்லா மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் ரூபாக் கணக்குகளுக்கும், அவற்றுக்கான பதிவிலக்கமொன்று மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கணக்குகளைத் தவிர, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் மீளப்பெயர் குறிக்கப்பட்டு வதிவற்ற ரூபாக் கணக்குகளாக அவை தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் குழுமங்களினாலும் கம்பெனிகளினாலும் இலங்கைக்கு வெளியே வதிகின்றவர்களும் வெளிநாட்டில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவர்களுமான இலங்கையரினாலும் பேணப்பட்ட ஏலவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகளுக்கும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் மீளப்பெயர்குறிக்கப்பட்டு அவை முறையே வதிவற்ற ரூபாக் கணக்குகளாகவும் இலங்கை ரூபாக் கணக்குகளாகவும் தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

3. சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கமைய, குடியகல்பவரொருவர் எந்த நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்த்தைப் பெற்றுள்ளாரோ அந்த நாட்டில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துக்காக அவர் அல்லது அவள் இலங்கையை விட்டுச்செல்வதற்கு எதிர்பார்க்கின்றவிடத்து, அக்குடியகல்பவரினால் பேணப்பட்ட எல்லா இலங்கை ரூபாக் கணக்குகளுக்கும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அத்தகைய குடியகல்பவரின் புலம்பெயர்வுபற்றி எந்நேரத்தில் அறிந்ததோ அந்த நேரத்திலிருந்து உடனடியாக மீளப்பெயர்குறிக்கப்பட்டு, வதிவற்ற ரூபாக் கணக்குகளாக அவை தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

4. ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட பதிவிலக்கத்துடன் ஏலவே மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறந்துள்ள குடியகல்வோரின் பெயர்களில், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கமைய, குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகளை திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றது அல்லது அனுமதிக்கப்படுகின்றார்.

பாகம் IV

**கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரம்**

1. மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்களைக் கையாள்வதற்குப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

*(1)* இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஒரு குடியகல்பவர்;

*(2)* ஒரு பராயமடையாதவர் உட்பட இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஒரு நாட்டினத்தவர் அல்லாதவர்;

(3) 18 வயதினரானவரும் அல்லது அதற்குமேற்பட்டவரும் தற்காலிக வதிவு விசாவின்கீழ் வேறொரு நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு உட்கருதுகின்றவருமான ஒரு தனிப்பட்ட இலங்கையர்;

(4) பெற்றோர் புலம்பெயர் செய்திட்டமொன்றின்கீழ் புலம்பெயர்ந்தவராக வரவுள்ள ஒரு தனிப்பட்ட இலங்கையர்;

(5) மேலே (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இறந்த ஆளொருவரின் மரணச்சொத்தின் நிருவாகம் பூர்த்தி செய்யப்படும்வரை, அத்தகைய இறந்த ஆளின் மரணச்சொத்தின் ஒரு நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்; அல்லது

(6) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனுமாள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

2. குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகளை, இவ்வட்டவணையின் பாகம் I இன் 7(4) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டதும் இலங்கையிற் பெறப்பட்டதுமான அவரது அல்லது அவளது நடப்பு வருமானத்தைத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காகப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் திறந்து பேணுவதற்கான அதிகாரத்தை, அத்தகைய குடியகல்பவரினால் பூலோக ரீதியில் பெறப்பட்ட நடப்புக் கணக்கை அடையாளங்காண்பதற்குக் குடியகல்பவர் நிரந்தரமாக வதிகின்ற நாட்டில் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடொன்று இருந்தால் மட்டுமே கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) ஒரு குடியகல்பவர்;
(ஆ) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனுமாள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

3. வதிவற்ற ரூபாக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் I இன் 8 ஆம் பந்தியில் விதிக்கப்பட்ட, இலங்கையில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களையும் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளையும் வசதிப்படுத்துவதற்கு காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறாக, 2021, பெப்புருவரி 3 ஆந் திகதிய 2213/38 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காகக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) பற்றிய ஒழுங்குவிதிகளின்படி குடியகல்வோருக்கான வதிவற்ற ரூபாக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

4. ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும்

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 1 ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனும் தகவுடைய ஆள் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் முறைமையில் ஒரு மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்கை மட்டுமே திறத்தல் வேண்டும்.

(2) அட்டவணையின் இப்பாகத்தின் 2 ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனும் தகவுடைய ஆள் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் முறைமையில் ஒரு குடியகல்பவரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கை மட்டுமே திறத்தல் வேண்டும்.

(3) மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்கு மற்றும் குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கு ஆகிய இரண்டும் ஒரே அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும்.

(4) மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்குகளை அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான கட்டளைக்கற்களும் அத்தகைய கணக்குக்காக அனுமதிக்கப்பட்ட பற்றுக்களும் வரவுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(5) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, அட்டவணையின் இப்பாகத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட இவ்வொழுங்குவிதிகளினதும் பணிப்புகளினதும் நியதிகளின்படி அத்தகைய கணக்குகளைத் திறந்து பேணுவதற்குத் தகவுடையவர்களா என்பதை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், கணக்கைப் பேணும்போதும் அத்தகைய கணக்குகளை முடியபின்னர் ஆறாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்காகவும் கணக்குவைத்திருப்போரின் தகவுடைமைபற்றிய எண்பிப்பாக அவர்கள் தொடர்பான தகவல்களையும் ஆவணமுறையான சான்றையும் பேணுதல் வேண்டும்.

*02-379*